

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் எம்.ஜி.ஆர்.நகரில் மகளிர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபா சங்கர் ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு பரமக்குடி தெற்கு நகர் இளைஞர் அணி சார்பாக பரமக்குடியில் நடைபெற்ற மினி மாரத்தான் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கி இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் மற்றும் முன்னாள் அமைச்சர் எஸ் சுந்தர்ராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத்ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் கருப்பையா, நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் செயலாளர் ஜீவரத்தினம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சன் சம்பத்குமார், உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட, நகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை பரமக்குடி தெற்கு நகர் இளைஞரணி அமைப்பாளர் எம்.துரைமுருகன் ஏற்பாடு செய்திருந்தார்.

### நாமக்கல் மாவட்டத்தில் ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகள்!

# அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - எம்.பிக்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார்- வி.எஸ்.மாதேஸ்வரன் - கே.இ.பிரகாஷ்- எம்.எல்.ஏக்கள் -பெ.ராமலிங்கம் - கு.பொன்னுசாமி பங்கேற்பு!

நாமக்கல், ஜூன் 10–

நாமக்கல் மாநகராட்சி, முதலைப்பட்டியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா ஆகியோர் தலைமையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் வி.எஸ்.மாதேஸ்வரன் (நாமக்கல்) , கே.இ.பிரகாஷ் (ஈரோடு), சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 30 பயனாளிகளுக்கு ரூ.42,300/ மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாவில் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாமக்கல் முதலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடமும், நாமக்கல் தொகுதி முதலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடமும், சேந்தமங்கலம் தொகுதி பொட்டணம் பகுதியில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார துணை மையம், சேந்தமங்கலம் தொகுதி பேளுக்குறிச்சியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், முத்துகாபட்டியில் ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார துணை மையம், ராசிபுரம் தொகுதியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் என ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாமக்கல் தொகுதி களங்காணி , நத்தமேடு பகுதியில் 2 சுகாதார துணை மையம், பரமத்தி வேலூர் தொகுதியில் ஜேடர்பாளையம், நல்லூர் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம், மாணிக்கம்பாளையம், பாலப்பட்டி பகுதிகளில் வட்டார பொது சுகாதார அலகு, வேலகவுண்டம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம், திருச்செங்கோடு தொகுதி வையப்பமலையில் ஆரம்ப சுகாதார நிலையம், மல்லசமுத்திரம் பகுதியில் வட்டார பொது சுகாதார அலகு, கோழிக்கால்நத்தத்தில் சுகாதார துணை மையம், சேந்தமங்கலம் தொகுதி வரகூர், கொண்டமநாயக்கன்பட்டி பகுதியில் 2 சுகாதார துணை மையம், ராசிபுரம் தொகுதி நாமகிரிப்பேட்டையில் வட்டார பொது சுகாதார அலகு என ரூ.8.30 கோடி மதிப்பில் 13 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் ரூ.360.75 கோடி மதிப்பீட்டிலான மருத்துவத்துறை பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ரூ.2 கோடி செலவில் 8 நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடங்கள், ரூ.3.51 கோடி செலவில் 14 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், ரூ.5.96 கோடி செலவில் 13 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொது சுகாதார அலகுகள், செவிலியர் குடியிருப்பு மற்றும் கூடுதல் கட்டிடங்கள், ரூ.1.50 கோடி செலவில் குமாரபாளையம் அரசு மருத்துவமனையில், புறநோயாளிகள் பிரிவு, ஆய்வகம், விபத்து மற்றும் அவசர சிகிச்சை பரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு வசதிகள் கொண்ட புதிய கட்டிடம்,ரூ.45 இலட்சம் செலவில் கொல்லிமலை அரசு மருத்துவமனையில் இரத்த வங்கி, ரூ.2.33 கோடி செலவில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில், சி.டிஸ்கேன், சிஆர்ம் ஆகிய கருவிகள் ரூ.345 கோடி செலவில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிய கட்டிடம் மற்றும் மருத்துவ சேவைகள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

அதேபோல ரூ.110.95 கோடி செலவில் 20 மருத்துவ கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில் ரூ.23.75 கோடி மதிப்பில் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகள் இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மிகசிறப்பான முறையில் மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. நாமக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை பொதுமக்கள் அனைவரும் 100 சதவீதம் அரசு சேவையினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையில், ஏராளமான பொதுமக்கள் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை, நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தனியார் மருத்துவனையை விட கூடுதலான செயல்பாடுகள் இம்மருத்துவனையில் மேற்கொள்ளப்பட்டு வரு கறது.

பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல பரமத்தியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் ரூ.50 இலட்சம் மதிப்பில் கபிலர்மலை வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.33 இலட்சம் மதிப்பில் கூடச்சேரி துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரூ.1,018 கோடி மதிப்பில் அமைக்கப்படும் என்று அறிவித்த நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் 2 அரசு தலைமை மருத்துவமனைகள் வேண்டும் என்ற கோரிக்கையினை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வைத்தார். அதனடிப்படையில் ரூ.53.39 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு தன்னிறைவு பெற்ற மருத்துவமனையாக பணிகள் நடைபெற்று வருகிறது. ரூ.23 கோடி மதிப்பில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் மாநகராட்சி துணை மேயர் செ.பூபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி, நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கே.சாந்தா அருள்மொழி, இணை இயக்குனர் (மருத்துவப்பணிகள்) மரு. அ.ராஜ்மோகன், மாவட்ட நல அலுவலர் மரு.க. பூங்கொடி, நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு வனத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் சார்பில் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதி, கமுதி மத்திய ஒன்றியக் கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது கமுதி மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் சண்முகநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வே.வாசு தலைமையில்

# துறைமுகம் மேற்குப் பகுதியில் செம்மொழி நாள் புகழரங்கம்!

### கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. – நடிகர் பொன்வண்ணன் – இரா.ராஜீவ் காந்தி சிறப்புரை!

சென்னை, ஜூன் 10 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு “செம்மொழி 5”ஓய்வறியா உழைப்பாளி! உரிமைக் களத்தின் போராளி! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் இன்று (10-06-2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, அயன்புரம், போர்ச்சீயஸ் ரோடு, ஜாயிண்ட் ஆபிஸ் அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் பகுதி செயலாளர் வே.வாசு தலைமை வகிக்கிறார். மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., கூ.பி. ஜெயின் எம்.சி., டிவி.செம்மொழி எம்.சி., சாவித்திரி வீரராகவன், சுதாதீனதயாளன் எம்.சி., வானவில் விஜய், ஜி.ஜெ.பிரபு, லதா வாசு எம்.சி., எம்.சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், அமுல், நா.அறிவுடை நம்பி, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை, ம.ஜெகதீஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.சபாபதி, வ.ரமேஷ் பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., திரைப்பட நடிகர் பொன்வண்ணன், கழக மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி ஆகியோர் புகழுரையாற்றினர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், ஓ.ஏ. நாகலிங்கம், மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி., கே.சந்துரு, சி. மகேஷ்குமார், சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், ஷேக்அப்துல்லா வே. உமாகாந்த் பரிதிஇளம்சுருதி எம்.சி., எல்.பி.எப்.ஆர்.வரதன் வழக்கறிஞர் இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் எ.புனிதவதி எத்திராசன் எம்.சி., இசட்.ஆசாத் எம்.சி., மண்டலக் குழு தலைவர்கள்: சொ.வேலுஎம்.சி., சரிதாமகேஷ்குமார் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஐ.சி.எப்.வ.முரளிதரன்.

பகுதி கழக செயலாளர்கள்: எ.நாகராசன் எம்.சி,டி. எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர். பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கர் நீலகண்டன் எம். இப்ராஹிம்கனி டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி, அ.நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி, ஜெ.பாலமுருகன் ஆர்.டி.சங்கர் நானா நா.துலுக்காணம் எல்.பி.எப்.மோகன் துரை கண்ணன் ஜி.தாமோதரன் ராஜேஸ்வரிஸ்ரீதர்எம்.சி ஜி.வி.நாகவள்ளி எம்.சி எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார் பா.ஜெகதீஷ் க.வினோத், எஸ்.தனசேகர், எம்.விநாயகம், ஆர்.எஸ். சித்திக் ம.அசோக்குமார் க.பா.பிரதீப்குமார் கு. கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார் கா.ராஜ்முக மது து.ஆயிரம் இரா.வீரமணி, வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜெ.எஸ். பிரபு வி.து.இராமமூர்த்தி பா.இளையா ம.கலைச்செல்விஐ.சி.எப்.மு.சுரேஷ் பாபு, வில்லிவாக்கம் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சேகர் ஆர்.தீனதயாளன் க.சுகுமாரன் மா.அகிலன் பா.ஜானி சொ.முருகேசன் ப.லோகு பாபு உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள், கழக நிர் வாகிகள் பங்கேற்கின்றனர். எ.வேதா நன்றி கூறினார்.



மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் பூங்கா நகரில் இருக்கும் அங்கன்வாடி மையத்திற்கு 58 வது வார்டு செயலாளர் சீனி ரமேஷ், எடை பார்க்கும் இயந்திரம் வழங்கினார். உடன் மாவட்ட ஒச்சு பாலு, மாவட்ட அவை தலைவர் சின்னம்மாள் மாவட்ட துணைச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் வைகை எம். பரமன், 57 வது வார்டு செயலாளர் ஆட்டோ சுரேஷ், துரைமணி, மாவட்ட பிரதிநிதிகள், பாண்டி, ரமேஷ், உதயா கதிரவன், சேட்டுசிவா, 58 வது வார்டு நிர்வாகிகள் அபி இளவரசன், வெள்ளிமுத்து, முருகேசன், மாரிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலூர் கி. கோவிந்தராசன்

**ஜூன் 10 (1998)**



**கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.**

**கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.**

**நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.**

**தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.**


**தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, “அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது” என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பையன் (எ) எல்.ஆறுமுகம்

**ஜூன் 10 (2024)**



**1952ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தொகுதியில்போட்டியிட்டபோது, மிட்டா, மிராசுகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக் கொண்டு எதிர்த்து நின்று கழகப் பணியாற்றியதால் கலைஞர் அவர்களால் “முண்டாசு சேப்பையன்” என்று அழைக்கப்பட்டவர்.**

**தொடர்ந்து பத்தாண்டுகள் மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**